டும். போர்க்காலம் மாதிரி செயல்படவேண்டும். பஞ்சப் பிரதேசம் என்று அதிகார பூர்வமாக அறிவிப்பதில் சிரமம் ஒன்றும் இல்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரே வரியில் சொல்லிவிடலாம். அது இடைஞ்சல் நிலையை, பஞ்ச சூழ்நிலையைத் தீர்க்காது. இருக்கும் நிலையை ஒத்துக்கொண்டு, அதற்குத் தக்கவாறு எல்லோரும் செயல்பட வேண்டும். இதில் அரசாங்கம் ஒன்றும் செய்வதற்கில்லை என்று சொல்லிவிடலாம். இது ஒரு "act of God" அரசாங்கத்தின் ஆக்கு இல்லை. அப்படிப்பட்ட நிலை வந்ததால், அதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். இன்றைக்குத் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர், திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் நாம் ஒரு பெரிய நெருக்கடியை அடைந்திருக்கிறோம் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் முழு அளவிற்கு ஒப்புக்கொள்கிறேன். இந்த நிலையைச் சமாளிக்க, மாண்புமிகு முதல் அமைச்சருடைய கரங்களை வலுப்படுத்த நாம் காரியங்களைச் செய்ய வேண்டும். நாம் நன்றாக இருந்த காலத்தில் கேரளத்திற்கு, 1½ லட்சம் டன், 1½ லட்சம் டன், 40,000 டன் என்று நம்முடைய தேவைக்குமேல் கொடுத்து நம்முடைய பரிவைக் காண்பித்திருக்கிறோம். மத்திய சர்க்காரிலும், இந்த அரசாங்கத்திடம் பரிவோடு கூடிய உணவு அமைச்சர், திரு. ஜகஜ்ஜீவன்ராம் அவர்கள் இருப்பதால், அவர்கள் நல்ல வகையில் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இன்றைக்கு எதிர்பாராத வகையில் ஏற்பட்டிருக்கும் தமிழ் நாட்டின் துரதிருஷ்டத்தை அரசியல் விளையாட்டுக்கு இடமில்லாமல், இங்கே மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளியே இருக்கும் தலைவர் சொல்கிறார்கள். இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி, வர்த்தக சூதாடிகளிடமிருந்து, இந்த உயிர்ப் பிரச்சினையை பணயம் வைக்காமல் காப்பாற்றி, இந்த மாமன்றத்தில் எல்லாத் தரப்பினரும் ஒத்துக்கொள்ளும் பஞ்சப்பிரதேசமாக ஏற்பட்டுவிட்ட நிலையை சமாளிக்க எடுக்கப்படும் முயற்சிகள் பயன் அளிக்கும் வகையில் ஆக்க பூர்வமாக எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

(ஆ) கும்பகோணம் பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தும் உயிர்ச்சேதமும்.

THIRU N. S. V. CHITHAN : Mr. Speaker, Sir, under rule 41 of the Assembly Rules, I wish to call the attention of the Hon. the Minister for Labour to a matter of urgent public importance, namely, the serious explosions in Kumbakonam Fire Works Factory from October resulting in loss of life.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்திலிருந்து சுமார் 4 மைல் தொலைவிலுள்ள சோழமாளிகை கிராமத்தில் அமைந்துள்ள மெஸர்ஸ் சுந்தரம் பட்டாசுத் தொழிற்சாலையில் 2 –9–196 -ம் தேதியன்று பிற்பகல் சுமார் 5–30 மணிக்குத் தீ விபத்து ஏற்பட்டது. இவ்விபத்து அத் தொழிற்சாலையின் மருந்து கலவை அறைக்குள் சீனவெடிகளைத் தயாரிப்பதற்காக கந்தகம், பொட்டாசியம், நைட்ரேட் அலுமினியம் தூள் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து தயாரிக்கையில் ஏற்பட்டது. இந்தத் தொழிற்சாலை பிரிவில் வெடி விபத்து எதுவும் இல்லை. இந்த விபத்தின் விளைவாக அந்த இடத்திலேயே இருவர் உயிர் இழந்தனர். 20 பேர் காயமுற்று மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட 20 பேர்களில் 1 பேர் மறுநாள் இறந்தனர். இந்தத் தீ விபத்திற்குக் காரணம் திட்டவட்டமாகத் தெரியவில்லை. இங்கு பெரும் சேதம் ஏற்படுத்தத்தக்கூடிய வெடி விபத்தோ நாசம் ஏற்படுத்தக் கூடிய தீ விபத்தோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இப்படி நிகழ்ந்திருந்தால் கட்டிடம் முழுவதுமே நாசமடைந்திருக்கக் கூடும். அந்த இடத்திலேயே உயிர் இழந்த இரண்டு

பேர் கலவை செய்யும் தொழிலாளர்கள் என்று தோன்றுகிறது. காயமடைந்த 20 பேர் கூக்குரல் கேட்டதும் கலவை செய்யப்படும் அறைக்கு விரைந்தோடித் தீயினால் பாதிக்கப்பட்டவர்கள் எனத் தோன்றுகிறது.

வெடி மருந்துகள் முதுநிலை ஆய்வாளரும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரும் இந்த இடத்திற்குச் சென்று புலனாய்வு செய்து விசாரணை நடத்தினர். இவ்விபத்தின் விளைவாக இத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. இது இன்னும் மீண்டும் திறக்கப்படவில்லை.

தீ விபத்துக்களையும் பிற விபத்துக்களையும் தடுப்பதற்காக இத்தகைய தொழிற்சாலைகளில் பல்வேறு வகையான பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தொழிற்சாலை ஆய்வாளரகம் செயல்படுத்தி வருகிறது. இந்தத் தீவிபத்து கற்பித்துள்ள படிப்பினையை யொட்டி, தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் உட்பட கூடுதலான விபத்துத் தடுப்பு நடவடிக்கைகள் விதிக்கப்படும். அவற்றைக் கண்டிப்பாக செயல்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து 19 பேர் உயிர் இழந்ததாகத் தெரிகிறது. இதேபோல் சிவகாசியிலும் அடிக்கடி நடக்கிறது. வெடி மருந்துச் சட்டம் சரியாக அமல் படுத்தாததால் இந்தமாதிரியான விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவைகள் ஏற்படாமல் செய்வதற்காக அரசாங்கம் விசேஷமாக என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது ? குறுகிய இடத்தில் மிக அதிகமான பேர்களை வேலை செய்யச் செய்த இந்த நிர்வாகத்தினர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? உயிர் இழந்தவர்களுக்கு நஷ்டஈடு தரப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரணை நடத்தி அறிக்கை அளிப்பதாக இருக்கிறார். அறிக்கை அரசுக்குக் கிடைத்ததும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1969-70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொதுவிவாதம் நடைபெறும்.

5. நடைமுறைக் கேள்வி

சட்டப்பேரவை முஸ்லிம் லீக் கட்சித்தலைவர் நியமனம்.

திரு. க. ராமமூர்த்தி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், தலைவர் அவர்களே, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சட்டமன்ற கட்சித் தலைவராக ஹாஜி ம.மு. பீர்முகம்மது என்பவரை நியமித்திருப்பதாக இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் திரு முகம்மது இஸ்மாயில் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தமிழக சட்டசபையில் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற உரிமை, சட்டமன்றக் கட்சியினுடைய பொறுப்பாகும். ஹாஜி முகம்மது பீர்முகம்மது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சட்டமன்றக் கட்சி கூடி முடிவு செய்ததா ? இதுபற்றி பேரவைக்கு ஒன்றும் அறிவிக்கப்படவில்லை. இதற்குமுன் தலைவராக இருந்த திரு. அபிபுல்லா பேக் என்பவர், "தம்மை தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டது தனக்கே தெரியாது" என்று பத்திரிகையில் அறிக்கைவிட்டிருக்கிறார். தமிழகச் சட்டமன்றத்திற்கு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் யார் என்று அறிவிக்கப்பட வேண்டிய பொறுப்பு, சட்டமன்றக் கட்சியினுடைய பொறுப்பா ? அல்லது இங்கே அங்கம் வகிக்காத, அலுவல்களிலே பங்குபெறாத வெளியிலே உள்ள அரசியல் கட்சித் தலைவரின் பொறுப்பா என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே உள்ள இரண்டு உறுப்பினர்களிடையே கருத்துவேறுபாடுகள் இருந்தன. ஆகவே, இவர்களுடைய கட்சித் தலைவர், "இவர்தான் சட்டமன்றக் கட்சித் தலைவர்" என்று தெரிவித்தார். அதன்பிறகுதான் அவருக்கு இடமாற்றம் அளித்திருக்கிறோம்.